ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2123/36 - 2019 මැයි මස 15 වැනි බදාදා - 2019.05.15
*2123/36 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: மஹ/நிர்வாக/05/மின்/135/1.

மக்கள் பணியொன்றுக்காக தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின், மஹரகம பிரதேச செயலகப் பிரிவில் எரவ்வல கிராம (மஹரகம நகர சபை எல்லைக்கு) உட்பட்ட அளவீட்டாளரினால் விளக்கப்படும் ஆரம்ப வரைபட இலக்கம் கொ. 9816 இல் காட்டப்பட்டுள்ள படி அளவில் விஸ்தீரணம் 0.1939 ஹெக்டயார் கொண்ட கீழ் கூறப்படும் வரைபடத்திற்கு உரித்தான காணித் துண்டுக்கான வரைபடம் :

*1.* **துண்டு இல. 01**
காணியின் பெயர் : - ; விபரம் : வீதி ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : பி. ஏ. டி. சி. ஜே. பெரியப்பெரும மற்றும் மேலும் சிலர் ; விஸ்தீரணம் : 0.0100 ஹெக்டயார்.

*2.* **துண்டு இல. 02**
காணியின் பெயர் : கெகுனகஹவத்தை மற்றும் தெல்கஹவத்தை; விபரம் : கேவத்தை, அதிக பலத்துடன் மின்சாரம் கடத்தும் மின்கம்பம் உள்ளது ; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : பி. ஏ. டி. சி. ஜே. பெரியப்பெரும மற்றும் மேலும் சிலர்; விஸ்தீரணம் : 0.0018 ஹெக்டயார்.

*3.* **துண்டு இல. 03**
காணியின் பெயர் : கெகுனகஹவத்தை மற்றும் தெல்கஹவத்தை; விபரம் : கேவத்தை ; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : பி. ஏ. டி. சி. ஜே. பெரியப்பெரும மற்றும் மேலும் சிலர்; விஸ்தீரணம் : 0.1821 ஹெக்டயார்.

1A - G 30074 - 22 (2019/05)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு மஹரகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

எம். எம். கே. தில்ருக்ஷி,
பிரதேச செயலாளர்,
மஹரகம.

பிரதேச செயலகம்,
மஹரகம,
2019, மே 15.

05 - 828